


ஈரோடு ரயில் நிலையத்தின் விரிவாக்க பணிகளை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வே.செல்வராஜ், பகுதிச் செயலாளர்கள் பெரியார் நகர் அக்னி சந்துரு, கோட்டை பொ.ராமசந்திரன் உள்ளிட்ட இரயில்வே துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே சாலை விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 14 -

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், அனஞ்சையூர் கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், சிட்டம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பிரசாத் (வயது 25) என்பவர் தனது மனைவி திருமதி. சத்யா (வயது 20) மகன் செல்வன்.அஸ்வந்த் (வயது 3) மற்றும் அவரது உறவினர் திருமதி. சோனேஸ்வரி ஆகியோருடன் 11.11.2025 அன்று இரவு சுமார் 7.20 மணியளவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், அனஞ்சையூர் கிராமத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கு ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு இருசக்கர வாகனத்தில் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தபோது மதுரையிலிருந்து சிவகங்கை நோக்கிச் சென்ற காவல்துறை வாகனமும் மேற்படி இருசக்கர வாகனமும் பூவந்தி சக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலை செல்லும் சாலையில் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த பிரசாத் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மேலும் அவரது மனைவி திருமதி.சத்யா மற்றும் மகன் அஸ்வந்த் ஆகிய இருவரும் சிகிச்சைக்காக திருப்புவனம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் காயமடைந்து மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. சோனேஸ்வரி என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.


## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி - மாவட்ட- மாநகர - ஒன்றிய – நகர – பகுதி - பேரூர் கழக

# இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தல்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணியின் மாவட்ட மாநகர ஒன்றிய - நகர - பகுதி பேரூர் கழக இளைஞர்அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டம், எனது தலைமையிலும், கழக இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன் முன்னிலையில் இன்று (14.11.2025, வெள்ளிக்கிழமை), மாலை 03.30 மணி அளவில், காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே.கலையரங்கத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட மாநகர- நகர பகுதி பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1) நவம்பர் 27 தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது,

2) பாக, கிளை இளைஞர் அணி ஆய்வு.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.




நாகை மாவட்டம், வேதாரண்யம் நகராட்சி, தோப்புத்துறையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாவினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார். உடன் நாகை மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவருமான என்.கௌதமன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், வேதாரண்யம் தொகுதி பார்வையாளர் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் வி.ஜெயபிரகாஷ் வேதாரண்யம் நகரச் செயலாளரும், வேதாரண்யம் நகரமன்ற தலைவருமான மா.மீ.புகழேந்தி, ஒன்றியச் செயலாளர் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன் ஆகியோர் உள்ளனர்.

இதுவரை ரூ.6 கோடியே 35 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.**6 கோடியே 35 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/-** (இரண்டு லட்சம்) **12-11-2025** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பழ.புனிதம், தலைமைக் கழக பேச்சாளர், ஜெயங்கொண்டம், அரியலூர் | – 25,000/– |
| 2. | சு.சௌந்திரவள்ளி, மலையான்குளம், பொட்டல் அஞ்சல், சேரன்மாதேவி | – 25,000/– |
| 3. | வீ.கருப்பசாமிபாண்டியன், கழுகுமலை, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் | – 25,000/– |
| 4. | ஆர். சிம்சன், மணலிவிளை, செருப்பாலூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம். | – 25,000/– |
| 5. | கே. திருமலை, காமதேவன்நகர், திருவொற்றியூர், சென்னை – 19. | – 25,000/– |
| 6. | கோ.கோமதி, நேருஜி நகர், செதுக்கரை, குடியாத்தம், வேலூர் மாவட்டம். | – 25,000/– |
| 7. | ஆர்.ராதாகிருஷ்ணன், கீழ்வணக்கம்பாடி & அஞ்சல், திருவண்ணாமலைமாவட்டம் | – 25,000/– |
| 8. | எம்.ஜெயராமன், புதுக்காலனி, வளையாம்பட்டு அஞ்சல், விழுப்புரம் மாவட்டம். | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருவிடைமருதூர் தொகுதி பயிற்சி பாசறைக் கூட்டம் - அமைச்சர் கே.என். நேரு தலைமையில்!

## ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் கோவி.செழியன் - முனைவர் வே.மதிமாறன் - ப.திருமாவேலன் சிறப்புரை! சாக்கோட்டை க.அன்பழகன் முன்னிலை!

தஞ்சை, நவ.14-

தஞ்சை வடக்கு மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதி பயிற்சிப் பாசறைக் கூட்டம் இன்று (14.11.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி மற்றும் மாலை 3 மணி அளவில் திருவிடைமருதூர் சாரதா மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.ராமலிங்கம் வரவேற்புரை ஆற்றுகிறார்.

கழக முதன்மைச் செயலாளரும் அமைச்சருமான கே.என்.நேரு இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ., சு.கல்யாணசுந்தரம் எம்.பி., தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம், முனைவர் செ.குறிஞ்சிவாணன், சு.ப.தமிழழகன், கோ.க.அண்ணாதுரை, கூகூர் சி.அம்பிகாபதி, உள்ளூர் டி.கணேசன், உதயா இரவிச்சந்திரன், மிசா என். மனோகரன், ஜெ.சுதாகர், சா.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கோவி.செழியன், சிந்தனை எழுத்தாளர் வே.மதிமாறன், கலைஞர் டிவி. தலைமை செய்தி ஆசிரியர் பா.திருமாவேலன் ஆகியோர் கலந்து கொண்டு தொடக்க உரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாலை 3 மணி அளவில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மத்திய முன்னாள் அமைச்சருமான ஆ. இராசா எம்.பி., மு.பெ.கிரி எம்.எல்.ஏ., அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. ஆகியோர் உரை நிகழ்த்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் வாக்குச்சாவடி முகவர்கள் (டி.எல்.ஏ. 2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (பி.டி.ஏ.), இளைஞர் அணி பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள்: குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, முத்து. உத்திராபதி, இரா.விஜயன், மாவட்ட நிர்வாகிகள்: க. நசீர் முகமது, கோவி.அய்யாராசு,ஜெ.நடராஜன், ஜெயலட்சுமி நடராஜன், எஸ். துரைமுருகன், பொதுக்குழு உறுப்பினர்கள்: இரெ.கருணாநிதி, இரா.அசோக்குமார், ஜி.கலியமூர்த்தி, மருது.நடராஜன், ரேவதி நடராஜன், பேரூர் கழக செயலாளர்கள்: இரா.கோபாலகிருஷ்ணன், எஸ்.கே.பஞ்சநாதன், வ.மகாலிங்கம், கோ.சி.இளங்கோவன், சி. தாமரைச்செல்வன், டி.எம். சப்பானி மற்றும் மாவட்ட கழக பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். நிறைவாக திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சுந்தர் ஜெயபால் நன்றி கூறுகிறார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோ விலூர் சட்டமன்றத் தொகுதி, முகையூர் வடக்கு ஒன்றியம், கொடுங்கால் ஊராட்சியில் உள்ள ( 139, 140, 141 ) ஆகிய வாக்குச்சாவடிகளில் 04112025 முதல் நடைபெறு வரும் S.I.R (சிறப்பு வாக்காளர் திருத்த பணிகள்) குறித்தும் மற்றும் பாக முகவர்கள் ( BLA2 ), பூத் குழு உறுப்பினர்கள் (BLC) நோட்டுகள் பூர்த்தி செய்யும் பணிகள் குறித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன் கௌத சிகாமணி ஆய்வு மேற்கொண்டார். ஒன்றியச் செயலாளர்கள் ஜி.ரவிச்சந்தி ரன், எஸ்.லூயிஸ், க.மும்மூர்த்தி, ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், ஒன்றிய நிர்வாகிகள் காத்தவராயன், முருகையன், சாந்தகுமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அமுதா, கிளைச் செயலாளர்கள் பவுல்ராஜ், சர்வேஷ், மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், பாக முகவர்கள் ( BLA2 ), பூத் குழு உறுப்பினர்கள் (BLC) கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.